உளி-1 | ஓசை-54 | ஆகஸ்ட்-2021 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
மதன் குமார்

அட்டைப்படம் :
படைப்பு டிசைன் டீம்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

ப்ரியா பாஸ்கரன் - 4
தீபிகா நடராஜன் - 5
போஸ் பிரபு - 5
பன்னீர்செல்வம் - 6
அனுபாரதி - 7
ஃபஷ்றி - 7
ஆகிஷா - 8
நட்சத்திரப்பாடகன் - 8
பிருந்தா சாரதி - 9
யாழ் தண்விகா - 10
கவி. கோ. பிரியதர்ஷினி - 11
ரா.ஆனந்த் - 12
சந்துரு - 13
உமா மஹேஸ்வரி பால்ராஜ் - 14
ராஜாஅபி - 14
வாசகி பஸ்னா - 15
புதுகை விஜய்ஆனந்த் - 16
குபோதினி - 17
கிறிஸ்டினா அருள்மொழி - 18
லாஸ்யா - 18
நாடன் சூர்யா - 19
தி.கலையரசி - 20
கா.ரஹ்மத்துல்லாஹ் - 21
முத்துக்குமார் சங்கரன் - 22
ஷீபா ராணி - 22
சுதா - 23
மழைக்குருவி - 24
ஜே.ஜே - 25
நித்யா சபரி - 25
நஃப்ரிஸ் பின் சம்சுதீன் - 26
விவெ - 27
வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் - 27
மன்னைஜீவி - 28
சிபானா அஸீம் - 29
மு.முபாரக் - 30
கலை - 31
பூங்கோதை கனகராஜன் - 31
தோழன் பிரபா - 32
சிங்கார சுகுமாறன் - 33
மலர்விழி - 34
தமிழினியன் சேயோன் - 35
அலர்மேல்மங்கை - 36
காட்டுவா ராபி.மு - 36
விணோதன் - 37
ச.இராஜ்குமார் - 38
மா.தனபால் - 39
அ.உமர் பாருக் - 39

# விருட்சத்தின் துயரைக் கரைத்தழிக்கும் தலைவன்



உயரிப்பனையின் நெடுஞ்சினையில்
தூக்கணாங்குருவி கூடாய்
தொழில்

கருங்கோட்டுப் புன்னையின் கொழு நிழலில்
இளைப்பாறத் துடிக்கும் வெயிலாய்

வியர்வையில் நீரூற்றி வளர்த்த
உழைப்பின் கசகசப்பு

இருப்பினும்
உண்ண மறந்தும் உறக்கம் மறந்தும்
மலங்கழிக்கும் போதிலும் கூட

காற்றின் திக்குகளில் அலைக்கழிக்கிறது
மனதைத் திமிலாய்

நாளும் எவரோ ஒருவரால் திணிக்கப்படும்
வன்மங்கள்

தன்னை மறந்து தலைவன் தாளேயென
அகலிடம் புக கரைந்தழிகிறது
விருட்சத்தின் துயர்.

▫ ப்ரியா பாஸ்கரன்



ஓட ஓட துரத்தி
அடிக்கும் அம்மாவை
நான் ஒருபோதும் கண்டதில்லை

படிக்கவில்லையென
அப்பா திட்டியதாய்
என் நினைவிலேயே இல்லை

கைகால் நோக
விளையாடிய நாளில்லை

நினைத்து சிரிக்கவோ
தடவி சிலிர்க்கவோ
ஒரு தழும்பும் இல்லை

அப்படி என்ன செய்தேனென
இப்போது தேடுகிறேன்
அந்தோ,
பாடப்புத்தகத்தின்
ஏதோஒரு பக்கத்தில்
பரிதாபமாய் இறந்து கிடந்தது
என் பால்யம்.

▪ **தீபிகா நடராஜன்**

சம எடையுள்ள இரையை வீழ்த்திவிட்டு
பாதுகாப்பான இடத்தில் இரையை பத்திரப்படுத்த
இழுத்து செல்லும்
வேட்டை மிருகம்போல் உன் அன்பை
பத்திரப்படுத்துகிறேன்
அவ்வளவு
அன்பின் பசியெனக்கு

▪ **போஸ் பிரபு**

# மௌனமென்பதும் பொய்யே....



நாம் மௌனித்து இருக்க
நிறையப் பேசுகிறது அங்கங்கள்.....

உதடுகள் அசையவேண்டாம்
இதழோர சிறு புன்னகை
ஏதோவொரு
சம்மதத்தை சொல்லிவிடுகிறது....

சிறு
கையசைவு வேண்டும்..வேண்டாம்
என்பதை
உறுதி செய்து விடுகிறது ....

ஓர்
ஏக்கப்பார்வை நமக்கு
ஏது தேவையென்பதை
உணர்த்திவிடுகிறது.....

முகபாவனை
விருப்பத்தையும் வெறுப்பையும்
காட்டி விடுகிறது....

ஓட்டமும் நடையும்
நமதான
அவசரத்தை சொல்லிவிடுகிறது.....

குரூரப்பார்வை
கோபத்தை காட்சிப்படுத்துகிறது...

பக்கம்பக்கமாக
சிலரை மனதுக்குள் திட்டித்தீர்த்துவிடுகிறோம்...
மௌன ஓசை நமக்கு நன்றாக கேட்கிறது..

தூங்குவதுப்போல்
விழித்திருக்கிறோம்...விழித்திறந்தே
தூங்குகிறோம்.....

குளிரென்றாலும்....
சுடும் வெயிலென்றாலும்.....
ஆச்சரியமென்றாலும்......
சோகமென்றாலும்.......

உடலின் மொழி
எல்லாவற்றையும் பேசுகிறது....

எந்த தனிமையிலும்
நாம் தனிமையாக இல்லை....

உடலின் தத்துவப்படி
மௌனமென்பதே பொய்தான்....

▪ பன்னீர்செல்வம்



அப்பாவுக்கு
தாங்கத்தெரியும்
ஒரு பறவையின் கால்களை
தாங்கும் கிளைபோல்
தாங்கிகொள்வார்..

ஒரு மரம் தன்மீது
அமரும் பறவைகளை
சுமையாக பார்ப்பதில்லை..

அப்படிதான் அப்பாவும்
தாங்கிக்கொள்வார்
நம்மோடு சேர்த்து
நமக்கானவற்றையும்..!!

அப்பாவுக்கு தன்னைத் தவிர
எல்லாவற்றையும்
தாங்கத்தெரியும்

▪ அனுபாரதி

கடலின் வாயில்
வாழ்ந்திருக்கிறீர்களா?
நான் வாழ்ந்திருக்கிறேன்.
சிறு வயதில் கால் நனைக்க ஆசைப்பட்டுச்
சென்றபோது பால்போல் திரண்டு
பூனையாய்ப் பதுங்கி
கால்களை நக்கிய கடல்
ஆயிரம் கிராமங்களைத் தின்ற ஆடு ஆகிய
பின்னரான நாளொன்றில் தான் கடலின் வாயில்
வாழ நேர்ந்தது.
அப்பொழுதுகளில்
சில போது மாடு போல் அமைதியாக அமர்ந்து
அசை போட்டுக் கொண்டிருக்கும்.
சில நேரம் புலி போல் உறுமிப் பயமுறுத்தும்.
ஆளரவமற்ற சில நடுநிசிப் பொழுதுகளில்
நிலவையும் நட்சத்திரங்களையும்
மடியில் போட்டுத் தாலாட்டும் தாயாகிடும்.
அது என்னதான் நாடகமாடினும்
அது செய்த நம்பிக்கைத் துரோகத்தை
ஒரு போதும்
மன்னிக்கவே மாட்டேன்.

▪ ஃபஷ்றி



என்னதான் கண்ணீரை மறைத்தாலும் கண்கள் அதை காட்டிக் கொடுத்துவிடும். மற்றும் இந்த வாழ்வில் கற்பனையிலேயே மகிழ்ச்சியைக் கொண்டாட முடியுமாயிருக்கிறது.

அழுகையை கொட்டித் தீர்க்காதவரெல்லாம் தைரியசாலியென்று யார் சொன்னது உற்று பார்த்தால் அவர்களின் இதயம் சுக்குநூறாக சிதறிய தடத்தை கண்டு கொள்வீர்கள்

முதல் சந்திப்பையோ அல்லது ஆறுதல் பேச்சுக்களையோ நம்பி விடாதீர்கள். இங்கு அனைவரும் தங்கள் உண்மை முகங்களை கச்சிதமாக ஒளித்து வைக்க பழகிக் கொண்டவர்கள்.

மெல்லிய மனதினை உடையவர்களை மீண்டும் மீண்டும் காயப்படுத்தி கண்ணீரை பரிசளித்தால் நிச்சயமாக அவர்களின் பதிலடி என்பது வாழ்நாள் வரை தொடர்ந்திடும் மௌனமாகவே இருக்கும்.

தேடுவதற்கு ஆளிருந்தால் மட்டுமே தொலைந்திடும் எண்ணம் வரும். யாருமற்ற நிலையென்று ஒன்று தோன்றும் போது அங்கு வாழ்தல் என்பது மட்டுமே மீதமுள்ள வழியாய் இருக்கும்.

▪ ஆகிஷா

அந்த சைப்ரஸ் மரத்தின்
கடைசி இலையும்
உதிர்ந்து விழுகிறது.

அதோ தூரத்தில்
சிறு மேகத்துண்டொன்று
கண்ணீரை சிந்த முடியாமல்
கணத்துப் போகிறது.

காதலின் சாம்பலிலிருந்து
உயிர்த்தெழும் நினைவுகள்
சபிக்கப்பட்டவை.

தண்ணீரின்றி தவிக்கும்
ஒரு மீனின் தவிப்பை புரிந்தோருக்கு
இந்த கவிதையின் வலியும்
சர்வ நிச்சயமாய் புரியும்.

உயிர் காய்ந்து
மரணித்துப்போதலின் வலியை
வார்த்தைகளால் சொன்னால்தான்
அறிந்துகொள்ளமுடியும்
என்பதில்லை.....

வலியும் மரணமும்
வார்த்தைகளில் இல்லை
உதிர்வதில்தான் இருக்கிறது.

▪ நட்சத்திரப்பாடகன்

# காயசண்டிகை



திக்குமுக்காடிப் போனேன்
ஒரு கணம்.

ஒரு துக்க நிகழ்ச்சிக்கு உனதூர் வந்தவன்
சொல்லாமல் கொல்லாமல் திடீரென உனதில்லம்
வந்து நின்றேன்
கால இடைவெளியின்
தூரம் கடக்க இயலாது
தயங்கித் தயங்கி.

பின் மதிய உறக்கம் கலைந்து எழுந்து
அவசரமாய் உடை திருத்தி
எதிர்பாராதவனின்
எதிர்பாரா வருகை தந்த
வியப்பு வழியும் விழிகள் விரிய வரவேற்று
மீண்டும் மீண்டும் உணவருந்தச் சொல்லி
வற்புறுத்தினாய்.

வயிறு முட்டச் சாப்பிட்டுவிட்டுத்தான் வருகிறேன்
எனச் சொல்லிக்கொண்டே இருந்தேன் நான்.

பொய் சொல்லாதே
மறுபடி மறுபடி எனச் சட்டென்று
என் கை பற்றி உள்ளங்கையை
நாசியில் வைத்து முகர்ந்தாயல்லவா ?

உயிர்த்திருந்த காலங்களின் உணர்வு நிலைகளில்
எல்லாம்
உச்சம்தொட்டது அக்கணம்.

ஒரு
நொடியின் பிசிறில்
என் உணவில் மணமில்லை என்பதை
நீ உணர்ந்திருக்கக் கூடும்.

ஆயின்
உனதன்பின் நறுமணத்தை
காலம் தாண்டியும் சொல்லியதுன் சுவாசம்
என் உள்ளங்கையில்.

கூட்டமில்லா
இந்த மதிய நேரப் பேருந்தில்
நீ முகர்ந்த
என் உள்ளங்கையை
மீண்டும் மீண்டும் முகர்ந்தபடியே பயணிக்கிறேன்.
உன்னைக் கரம் பற்ற இயலா விதியின் முன்
பசியோடு விசும்பியபடி.

கூடவே வருகிறது
என் கோழைத்தனம்.

▪ பிருந்தா சாரதி



மழை வழி
மலை வலி...

எப்போதோ மாரியம்மன் கோவிலுக்குத்
தீச்சட்டி எடுக்க வாங்கிய
மஞ்சள் நிற வாயில் சேலை தான்
கடந்த சில மாதங்களாக
காளிக்கிழவிக்கு

நடை தளர்ந்து
விழும் இடங்களிலிருந்து
யாரோ ஒரு சிலரால்
வீட்டின் தாழ்வாரத்திற்குள்
அவ்வப்போது கிடத்தப்படுவாள்

அங்கங்கள் தெரிய
உடலொட்டிக் கிடக்கும் அச்சேலையில்
பாதி சாக்கடையிலும் பாதி பாதையிலுமாக
நீண்ட நேரம் கிடக்க
ஜன்னி வந்து செத்துப்போனாள்

எதுக்கு மழைகாலத்தில் செத்துத் தொலைஞ்சா
கெழட்டு முண்ட என்னும்
பொண்டாட்டியின் முன்னால்
கைகட்டி நின்றிருந்தான்
கிழவி மகன்.

பெருங்குரலெடுத்து
அழுதுகொண்டிருக்கிறது மழை
நெடுநேரமாக.

◘ யாழ் தண்விகா

# மயிரின் தூக்கு



ஐந்து வயதில்
என் விருப்பம்
இல்லாமல்
அந்த சலூன் காரனிடம்
கண்ணடித்து
அப்பா வெட்ட சொன்ன
ஹேர்ஸ்டைலுக்கு
கிராப் என்பது பெயர்

இருபத்தி ஐந்து வயதில்
அப்பா விருப்பம் இல்லாமல்
நான் வெட்டி வந்த அதே
ஹேர்ஸ்டைலுக்கு
ஆண் பிள்ளை என்று பெயர்

மயிரை மட்டும் வைத்து
மரபியலின் தந்தை
ஆனார் அப்பா

பதம் பார்த்தன
இவை மூன்றும்
என் பிஞ்சு தேகத்தை

தாத்தாவின் பிரம்புகள்
நீளமானவை
அப்பாவின் பெல்டுகள்
கனமானவை
அம்மாவின் தோசைகரண்டி
சூடானவை

அன்று தான் தெரிந்தது
மயிர்களில்
பெண்ணியம் மடலேறுவதை

நீள மயிர் எதை கூறுகிறது
மயிரின் நீளத்தில் தான்
பெண்ணியத்தின் அளவீடுகள் நிகழ்கிறதா
அப்பகுதி வரை ஆடும்
மயிரில் ஒன்றை பிடிங்கி
தூக்கிலிட்டுக் கொள்ளுங்கள்

கிராப் வெட்டிய பெண்கள்
நல்லவர்கள்
சாலையில் எங்கினும் தென்பட்டால்
கொஞ்சம் ரசித்துக்
கொள்ளுங்கள்

ஏதேனும் ஓர் கேன்சர் தோழி
கண்ணாடி பார்க்க
காரணமாக இருக்கலாம் இவள்

▫ கவி. கோ. பிரியதர்ஷினி



கூடிக்கொண்டே
போகிறது
என்
ஜட்டியின்
ஓட்டைகள்..

செலவு
செய்ய
மனம்
மறுக்கிறது
அவள் கையெழுத்திட்ட
100 ரூபாய்..

பிரியாணி கடைகள்
கண்களுக்கு
மட்டும்
விருந்தளிக்கிறது..

அம்மா தரும்
உணவாய்
அம்மா
உணவகம்..

இந்த மாதம்
வாடகை
வேண்டாம்
என்று வீட்டுக்காரர்
சொல்வது போல்
வரும் பகல் கனவு..

அனைத்து
முகூர்த்த தினங்களிலும்
மாப்பிள்ளை தோழனாய்
எல்லா மண்டபங்களிலும்..

தங்களையே
திட்டிகொள்கின்றன
வேலை தேடி
சலிப்படைந்த
காலணிகள்..

இரவு
சாப்பிடும்
முன் சிகரெட்
சாப்பிட்ட பின்
சிகரெட்
சாப்பாடும் சிகரெட்..

சென்னை
மனிதனுடன்
விளையாடும்.
சில நேரங்களில்
தள்ளியும் விடும்...

▪ ரா.ஆனந்த்

# புதிய மாமிசம்



வேட்டையாடப்பட்ட விலங்கின்
கொழுத்த சதைத்துண்டை
கவ்விக்கொண்டோடும் நரியைப்போல்
சுயநலங்களை பற்றிக்கொண்டு ஓடுகிறேன்
குற்றவுணர்ச்சியற்று
மறைவிடத்தில் வைத்து
என் தேவைகளை பிய்த்து
உண்ணத் தொடங்குகிறேன்
இரை தீர்வதற்குள் எண்ணம்
அடுத்த களவுக்கு தாவுவதால்
ஒவ்வொரு கைப்பற்றுதலிலும்
ருசியற்ற பண்டமாய் தோற்கிறது உணவு
ஒரு வழியாய் தின்று முடித்து
அடுத்த கவர்தலின்
தந்திரத்துடன் நிமிரும்போது
என்னைச் சுற்றிலும்
பெருமூச்சுகளுடன் நிற்கின்றன
வேட்டை மிருங்கங்களின் கால்கள்
ரத்தம் பூத்த அவற்றின் நாவுகளில்
இழந்த சதைகளை மீட்கும் வெறி...
சிக்கிக்கொண்ட அச்சத்தில்
நரியின் பற்களும் ரோமங்களும் உதிர்ந்து
இப்போது நான் மானாகி விட்டிருக்கிறேன்
உருமாறிய அதிர்ச்சியில்
தப்பியோடும் என் பாய்ச்சலுக்கு முன்பாய்
சிங்கத்தின் பிடறி மயிர்கள்
என் முகத்தில் உரசுகின்றன...
அதிசயமாய் தப்பி
புதர் மறைவில் இறைப்பு வாங்கி
நீர் பருக ஓடைக்குள் குனிகையில்
என் எலும்புகள் தவிர தசைகளனைத்தும்
உதிர்ந்திருந்ததைப் பார்க்கிறேன்...
என் எலும்புக்கூட்டில் சதையென
ஒப்புக்குத் துடிக்கும் இருதயமும்
செரிக்காத சில இறைச்சித் துண்டுகளும்
மட்டுமே மிச்சமாய் இருக்கின்றன
தூரத்தில்.........
துரத்தி வந்த விலங்குகளின்
நாவுகளில் சொட்டும் ரத்தத்தில்
புதிய மாமிசத்தின் வாடை...

▪ சந்துரு



களைப்புற்றுக் கனத்துப்போய்
காணாமல் ஒளிந்து கொல்கின்றன
உன் என் ஆன தீராப்ரியங்களின்
ஊடல் சொற்கள்

பூடகமௌனம் புறத்தோற்றத்தை
சீர்செய்ய அகவழி அவ்வப்போது
ஆய்வுக்குள் தான்

என்றோ இரு தண்டவாளத்தின்
மேல் ஓடித்தடதடவென தன்
சப்த அதிர்வை நமக்குள் இணைத்த
புகைவண்டி அலுத்துப் போய்
நகர்ந்து விட்டது

மௌனங்களின் ஈனஸ்வரத்தைப்
பாடலாய் கேட்டுக்கொண்டக்
காட்டுக்குயிலொன்று வந்தமர்ந்து
மென்று தின்று வீசிய எச்சத்தில்
என் புறம் முளைத்த செடியொன்றின்
பச்சையத்தில் பூவொன்று மலர
அதன் மேல் ஒரு வண்ணத்துப்பூச்சி

■ **உமா மஹேஸ்வரி பால்ராஜ்**

புற்றில் வசிக்கும்
கரையான்களின்
கடிகாரமெல்லாம்
நின்று முடித்த
பெருமழையின்
நிழலில் முடிகிறது

■ **ராஜாஅபி**



அன்றொருநாள் அங்கோர் இடத்தில்
எதேச்சையாய்த் திரும்பிய போது
என்னையே உற்றுப்பார்த்திருந்த
ஒருத்தனைக்கண்டேன்...
அதற்கும் மேல் அவன் சிரித்ததைக்
கண்கள் சொல்லிற்று....
அச்சு அசலாக என் பழங்கால
நண்பனொருத்தனாயிருந்தான்....

பதிலுக்கு நானும் சிரித்து விட்டு
அவன் பெயரை உச்சரிக்க முன்னரே
அவன் முகக்கவசத்தை நீக்கியபடி
என்னை நோக்கிப் புன்னகைத்தான்....

திடீரென
மறுபக்கம் திரும்பி
என்னை சுதாகரித்துக்கொண்டேன்....

இப்போதெல்லாம்
முகமூடிகளுடன் உலவும்
மனிதர்களைச் சரியாக
அடையாளம் காண முடிவதேயில்லை.....

இப்போது மட்டும் தானா
முகமூடி அணிந்து
அடையாளம் காணமுடியாதபடி
இருக்கிறார்கள் எனக்கேட்டால்
இல்லவேயில்லை....

அன்றிருந்து இன்றுவரை
ஆட்களைச் சரியாய்
உணர முடியாதபடி
ஆளுக்கொரு முகமூடிகள்.....

▪ வாசகி பஸ்னா



மௌனத்தின் பாஷை ஊமையென
யார் சொன்னது..?
மௌனத்தின் பாடல்கள்
கோடோன கோடி
ராகமிசைக்கும்...!

தலைவனைப் பிரிந்த
மழை இரவில் நுணலின்
கொர்..கொர்ரெனும் சத்தம்
அமானுஷ்ய பாடலொன்றை
இசைக்கும்...

பசலைக்கு இரையான
பெண்ணொருத்தியின் மணித்துளிகள்
டிக்..டிக் என ஏகாந்தத்தை
இசைக்கும்...

பிரிவுத்துயர் தீர்ந்து
நாணம் தின்று
பூட்டிக்கொண்ட
இதழ்கள் காதலை
இசைக்கும்...

நீங்கள் சாதிக்கும் கள்ள மௌனத்தின்
இரைச்சலைவிட ..
ஆனந்தமோ
அழுகையோ மௌனத்தின் பாடல்கள் யாவும்
அழகு தான்..!!

▫ புதுகை விஜய்ஆனந்த்



உலகில் சந்தோஷித்திருக்க மனிதர்கள் தான்
தேவையென
மனிதர்களை தேடிக்கொண்டிருந்தேன்

ஒரு பிடித்த கை எப்போதும் இதமாய் இருப்பதில்லை
எனக்கு மட்டும் சொந்தமென நினைக்கும் ஒரு
நொடி உடைத்துப்போட்டு வக்ரப்புன்னகையோடு
எனக்காக நீ அழு என அசுரத்தனமாய் சிரிப்பது
கேட்டது

நான் தராத அழுத்தங்களில் எல்லாம் ஏன் என்னை
அழுத்திப்பிடித்து உடைத்தீர்கள் என்று கேட்கத்
தோன்றியும்
என்வார்த்தைகளில் முள் இருந்து உடைக்குமே என
மௌனித்துக்கடந்துகொண்டேன்

நீயே என் எல்லாமும் என நம்பி சுயமிழந்து கிடந்த
தருணங்களில்
நம்பிக் கண்ணயர கடந்து போனபோது
காயம்பட்டு விழுந்த ஒரு பறவையின் சிறகை
ஒவ்வொரு இறகாய் பிய்த்தெடுத்தது போல
உணர்ந்தேன்

நம்பி பகிர்ந்து சுமப்பதாய்
நம்பிக்கை தந்து பாரமேற்றிவிட்ட தோள்கள்
திடீரென காணாமல் போனபோது
முதுகுடைந்து விழுந்த வலியை விடவும்
நம்பியவர்கள் தொலைந்த வலி உயிரை கொன்றது

எப்போதும் முகம்பார்த்து சிரித்துப்பேசியவர்கள்
வேறு யாருக்காகவோ வேறு முகம் ஒன்றை
காட்டியதும்
அத்தனை நாளின் பரிசுத்த ஆலாபனைகள்
காணாமல்போய்
அருவறுப்புகள் தொற்றிக்கொண்டது

இப்போதெல்லாம் நான் அழவில்லை என்பதற்காக
எனக்கு வலிக்கவில்லை என்று அர்த்தமில்லை
ஆனால் எனக்கு யாரும் தோள்தொட்டு ஆறுதல்
என அருகில் வந்துவிடக்கூடாது என்பதே
என் ஆகப்பெரும் பயம்..

**குபோதினி**

# கனவுக் குளத்தில் கை கோர்த்து...



எப்போதும் இப்படித்தான் நாம்
உன் சிவப்பு நேசங்களை நானும்
என் வெள்ளை விருப்பங்களை நீயும்
சுமந்து கொள்வோம்...

பால்யக் கனவிலிருந்து விடுபடவேயில்லை
இன்னும்...
பூக்கள் பவ்யமாக அமரும் என் கைகளுக்கு
எப்போதும் உன் தாங்கல்கள்தான்...

உச்சி வெயில் உச்சுக் கொட்டும் நம்மைப் பார்த்து...
வியர்வை விழுந்து உப்பான குளங்கள்
ஏசியிருக்கும்...

இன்னும் நாம் நிஜத்தில் பார்த்துக்
கொண்டதேயில்லை என்பதை
சொல்லிவிடாதே தாமரைக்கு...
நினைவுலகம் அத்தனை நேர்த்தியில்லை...

நாம் சந்திக்கும் வரை
கனவும்,கவிதையும்,பால்யமும்,
இந்தத் தாமரைக்குளமும் போதும்...!!!

▪ கிறிஸ்டினா அருள்மொழி

பெயரென்னவோ பெற்றோர்
வைத்ததுதான்,
செல்லப் பெயரைத் தவிர
வைத்த பெயரைக்கூட அவர்கள்
கூப்பிட்டதில்லை!!
பள்ளியிலோ தோழர்களுக்கிடையிலோ
பெயர் கூறி அழைக்கையில்
பெரிதான மகிழ்வோ துக்கமோ கோபமோ
இருந்ததில்லை!!
மனதுக்கு பிடித்தவர், மனதிற்குள்
நுழைந்தவர் அழைக்கும்
ஒவ்வொரு செல்லப் பெயரும் அன்பையும்
காதலையும் எவ்வளவுதான்
அள்ளியள்ளி வருகிறது!!
சட்டென வரும் ஊடலின் பொழுதுகளில்
பெயர் சொல்லி அழைக்கையில்
சொந்தப் பெயரே மனதின்
சுமக்கமுடியாத பெரும் பாரமாயும்
வேண்டாததாயும் தோன்றுகிறது!!!

▪ லாஸ்யா



என்னோடு
கதை பேசுங்கள்

தேவைப்படும் போது
என்னோடு வந்து
தேநீர் அருந்துங்கள்

பார்க்கும் போதெல்லாம்
எனக்கு
ஒரு புன்னகைத் தாருங்கள்

நேரம் கிடைக்கும் போது
என்னோட கொஞ்சம் தூரம்
நடந்து வாருங்கள்

உங்கள் பயணத்தில்
கொஞ்ச தூரம்
என்னையும் அழைத்து செல்லுங்கள்

என் கைகளை
இருக பற்றிக்கொண்டு
உங்கள் கவலைகளை சொல்லுங்கள்

என் மகிழ்ச்சியில்
பாதி கடன் வாங்கிக் கொண்டாவது
சிரியுங்கள்

என் எதாவது
ஒரு விரலை
கண்ணீர் துடைக்க
பயன்படுத்திக் கொள்ளுங்கள்

உங்கள்
நம்பகத்தனமான உலகில்
என் பெயரையும்
சேர்த்துக் கொள்ளுங்கள்

▪ நாடன் சூர்யா



மணமான புதிதில்
அப்பாவின் தொழில் நட்டத்தை
ஈடுகட்ட
கை காது கழுத்தில் இருந்து
கழற்றித் தந்தவையோடு
அம்மாவின்
சூரிய சந்திர பிறைகளும்
வங்கிப்பெட்டியில்
அஸ்தமனம் ஆகிப்போயின.

எப்போதாவது வீட்டிற்கு வந்து
தரிசனம் தந்துவிட்டுப் போகும்
தங்கத்தில்
மங்கலாகச் சிரித்திருந்தன
அந்தப் பிறைகள்.

ஒரு வழியாக
அக்காவின் கல்யாணத்திற்கென
மீட்டெடுத்த வேளையில்
இரண்டு தலைமுறையைக்
கடந்து விட்டிருந்தது
நகைகளின் பரிணாம வளர்ச்சி.

அவளுக்குப் பிடித்த மாதிரி
எல்லாவற்றையும்
புதுப்பித்துத் தருவதற்குள்
சூரிய சந்திர பிறைகளோடு
சேதாரமாகி இருந்தது
அம்மாவின் பொற்காலம்.

▪ தி.கலையரசி



ஏன்?
உன்னுடையக் கவிதைகள் எல்லாம்
கண்ணீர் வடித்தபடியேபேசுகிறது
என்று கேட்கின்றனர்

என்ன செய்வது?
ஒரே நேரத்தில் ஆனந்தத்தையும்
துக்கத்தையும் பேசுகின்றன
அவைகள்...

கேளிக்கையாய்
வெளிவந்த வார்த்தைகளுக்குக்
கைதட்டியக் கரங்கள்
வாழ்க்கையை வடித்தபோது
கைகட்டிக் கொண்டதென்ற துக்கமும்

பலரும்
உதறிக் கடந்துப் போனபின்
சில விரல்களேனும்
தடவிப் பார்க்கிறதே என்ற
ஆனந்தமும்தான்.

ஒருசேர
உண்டுக் கண்ணீர்
வடித்துப் பேசுகின்றன...

விதைகள்
விரைவில் முளைத்துவிடும்.
புரட்சிகளுக்குச் சிலகாலம் தேவைப்படும்.
அன்று
சிறு பொறியாயேனும் என் கவிதையும்
இருக்கும்...

▪ கா.ரஹ்மத்துல்லாஹ்



வேறொன்றுமில்லை
கடவுள் உன்னைத் தோள்
மாற்றிக் கொண்டிருக்கலாம்
அவ்வளவு தான்

நிறைந்த அரங்கினுள்
பறந்து பறந்து சோர்ந்த
ஒற்றை வண்ணத்துப்பூச்சி
இளைப்பாற வந்தமர்ந்தது
உன் தலையில் தானே.

உன் பாதையில் காத்திருக்கும்
சர்ப்பத்தின் பிம்பம் படிந்திருக்கும் விழிகளுடன்
பறந்து வரும்
பருந்தின் நிழல் உன்னைக் கடந்து
சென்று காக்கக் கூடும்

முடிவறியாப் பாதையின்
இருண்மை தரும் பதற்றம்
குன்றாத ஒன்றெனினும்
ஆதுரத்துடன் அரவணைத்துச்
சென்று விடுவாய் உன் நிழலில்

**முத்துக்குமார் சங்கரன்**

திரும்பி பார்க்கிறேன்..
மொத்தமும்
வெறுமையே..
சம்மணமிட்டு
அமர்ந்திருக்கிறது..!!

**ஷீபா ராணி**



கண் மறைந்து
சென்றவர்கள்... தேவைக்கு
கை சேர்க்கும் போது..
நானும் இருக்கப்
பற்றிக் கொள்கிறேன்.

அட்டைப் பூச்சியாய்
என் உடம்போடு ஒட்டி
நான் அறியாமல் என்
உயிர் குடிக்கும் போதும்...
பொறுத்துக் கொள்கிறேன்.

ஒருவரின் சோகத்தைப்
பகிர்ந்து ஏமாறும் போது...
சிரித்துக் கொண்டே
நகர்ந்து விடுகிறேன்.

மேலதிகாரியிடம் கைகட்டி
நிற்பது போல் நின்று
காரியம் சாதிப்பதைப்
பார்க்கும்பொழுது..
எப்படி இப்படி என்று
எனக்குள்ளே நகைத்துக்
கொள்கிறேன்.

இப்படியே இருந்தால் நீ எல்லாம்
உருப்பட மாட்ட என எச்சரிக்கும் சிலரிடம்.

நான் இப்படியே இருந்து விட்டுப் போகிறேன்.
படுத்ததும் உறக்கம்...
இயற்கையின் அசைவுகளை
ரசிக்கும் மனம்...டென்ஷன்
இல்லாத வாழ்வு...
இலக்கில்லாத பயணம்...
கள்ளமில்லாப் புன்னகை...
நான் நானா இருப்பதை விட...
வேறென்ன வேண்டும்...
நான் இப்படியே இருந்து விட்டுப் போகிறேன்...

▪ சுதா



டிஷ்யூம் டிஷ்யூம் என்ற மகனின் சொற்கள்
வீடு முழுதும் நிரம்பியிருக்கின்றன

கையை முறுக்கி முஷ்டியை மடக்கி
ஆவேசமாய் ஓடிவந்து ஸ்லோமோஷனில்
கன்னத்தில் மெதுவாய் குத்துவான்

மயிலிறகு ஒன்று கன்னத்தில்
வருடுவது போலத்தானிருக்கும்

தாவாங்கட்டை உடைந்து
தலை சுற்றி
கண்கள் சொருகி
கால்கள் தள்ளாடி
சுவரில் மோதி
மாடிப்படியில் இடித்து
ஐயோ என்று கீழே விழுவேன்

தலையைச் சுற்றி
மூன்று குருவிகள் வட்டமிடும்

மகன் நான்காவது குருவியாகி
சிறகடிக்க ஆரம்பிப்பான்
டிஷ்யூம் டிஷ்யூம் என

டிஷ்யூம் என்ற ஒற்றைச்சொல்லில்
அன்றலர்ந்த மலர் போலாகிவிடுகிறான்
பிள்ளை

டிஷ்யூம் என்பது
வெறும் சத்தம் மட்டுமில்லை.

▪ மழைக்குருவி



புலன்களை நலங்கேட்டவனின்
கரங்களில் அம்பரத் தடம்.
சாளரம் திறந்தால்
திரும்பி விடுவார்கள் யாசகர்கள்.

என் பாத்திரம் கண்ணற்றவனின்
எழுது கோல்.

சொல்லத் தெரிந்தும்
நாவினால் தண்டிக்கப்பட்டவனும் உண்டு.

என்னுடலுக்கு உணர்வெளியின் மேல்
நீந்தத் தெரியாது.

மூங்கிலை எழுதி எழுதி
இசையைப் பிழைக்க வைக்கிறது குருட்டு செவி.

யாருமே வாசிக்காத மூச்சினை
காற்றின் அலகு கொத்தி
கற்பாறையில் நழுவ விடுகிறது.

நலங்கேட்டவன் குருதி புடைக்க சபிக்கிறான்.
இறப்பதற்குள்
நூறு முறை பிறந்து விடுவேனாம்.

■ ஜே.ஜே

எல்லோரும் மழையை
ரசித்துக் கொண்டிருக்க
அம்மா மட்டும்
ஆழ்ந்திருக்கிறாள்
அடுப்பு மூட்டுவதைப்
பற்றிய சிந்தனையில்....!

■ நித்யா சபரி



ஆயினும் பரவாயில்லை
இன்னுமொருமுறை
கேட்டுக் கொள்கிறேன்
என் பிறப்பிற்கும் முந்திய
முதல் பருகுதலாகக் கூட
இருக்கலாம் அது

நான் யாரிடமும் வேண்டாத
ஒரு வார்த்தையை
நீங்கள் விரும்பிக் கேட்க
நான் தராமலிருப்பது
நமது உறவுக்கு நல்லதில்லை தான்

இன்னும் உங்கள் முதிர்வில்லா
மனதில் ஆழப் பதித்துக் கொள்ளுங்கள்
அந்த வார்த்தையை

நீங்கள் சரி என்று
சொல்லும் ஒரு வார்த்தை
திருப்திக்காக மட்டுமே
நானும் தயவுடன் கேட்கிறேன்
எத்தனை முறை வேண்டுமானாலும்

ஆயினும்
ஒரு உறவை முறித்துக் கொள்ள
ஆத்ம நம்பிக்கையை தவிக்க விட
பின்னொரு புன்னகையை பறிகொடுக்க
விரும்பாமலொரு தனிமையை ஏற்க
இனியும் என் அறை காதுகளுக்கு அழுகுரல் கேட்க
உயிர்ப்புள்ள எனது இரவுகள் நிம்மதியற்று அழைய

என் மனதின் ஆழ்ந்த அமைதியை கலைத்து விட
என்னைவிட்டு விரைவாய் எனது சுயம் ஓட
நினைவுகள் மட்டுமே எதிர்காலத்தில் எஞ்சியிருக்க
விடைதெரியா கேள்விகள் என்னுள் எழ
எழுதி முடிக்காத கவிதைகள் அனாதையாக
அன்பின் தவங்கள் பிழைத்துப் போக

இப்படியான தண்டனைகளை
நிரபராதியான நான் இனியும் சுமக்காமலிருக்க

நான் யாரிடமும் வேண்டாத
வார்த்தையை கேட்டுவிடுகிறேன்
உங்களுக்காக
மறுதிசையில் எனக்காகவும் கூட

அந்த வார்த்தை
எதிர்காலம் எவ்வளவு நேரம்
என்று தெரியாத ஒரு காரணமாகவும்
இருக்கக்கூடும்

ஆயினும் பரவாயில்லை
இன்னுமொருமுறை
கேட்டுக் கொள்கிறேன்
என் பிறப்பிற்கும் முந்திய
முதல் பருகுதலாகக் கூட
இருக்கலாம் இந்த வார்த்தை

மன்னித்து விடுங்கள் என்னை....

உதிரப் போகும் உயிரொன்றின்
இறுதி உயிலாக
எடுத்துக் கொண்டு மீண்டுமொருமுறை

மன்னித்து விடுங்கள் என்னை...

இந்த வார்த்தைக்கு துணை நின்றது
உங்கள் குற்றமா
இல்லை
என் அப்பாவித்தனமா
என்று அறிய வரும் நேரம்

புரிந்து கொள்வீர்கள்
மன்னிப்பை ஏற்றுக் கொள்வதற்கும்
மன்னிப்பை ஏற்றுச் சொல்வதற்கும்
இடையிலான மனப்பான்மையை...

**நஃப்ரிஸ் பின் சம்சுதீன்**



பென்சிலுடன்
காகிதத்திற்குள் குதித்தவள்
முதலில் இலையை வரைகிறாள்
பிறகு கிளையை வரைகிறாள்
அடுத்து மரத்தை வரைகிறாள்
கடைசியாக வனத்தை வரைந்தவள்
அதில் பறக்கத் தொடங்குகிறாள்
ஒரு பறவையாய்!

▫ விவெ

உன் கவியரங்கை
முன் வரிசையிலமர்ந்து
கவனிக்க ஆசையென்கிறாய்
முன் வரிசைக்கு
ஏன் செல்ல வேண்டும்
கவிதைக்குள் அமர
இடமிருக்கும்போதென்கிறேன்...

▫ வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்



பக்கத்து வீட்டு
தகரக் கொட்டகையில்
பட் பட்டென விழும் மழைத்துளி..!!

மழை பெய்தாலும் எங்கோ..தூரத்தில்
டப் டப்பென கேட்கும்
வானவேடிக்கை...!!

மழைக்குப் பயந்து
டுர் டுர்ரென
வேகமாய் போகும்
மூன்று சக்கர வாகனங்கள் ...!!

பூமிக் குடித்தது போக ..
தெருவிளக்கின் ஒளியில்..
மினு மினுப்பாய்
ஊர்ந்து செல்லும்..
மழைநீர்....!!

திடுக்கிட வைக்கும்
அவ்வப்போது
வேகமெடுக்கும்
இருசக்கர வாகனங்களின் சப்தம் ..!!

இருளின் அமைதிக்கு
துணையாய் மின்விசிறி சுழல..
இத்தனைக்கும் நடுவினில்
அமைதியாய் உறங்கும்
மகனைக் கண்டு
கொள்கிறேன் பொறாமை...!!

நானும் குழந்தையாகவே இருந்திருக்கலாமோ..????

▪ மன்னைஜீவி



பூத்துக்கிடப்பது பூக்களின்
தொழில் மட்டுமல்ல
சில புன்னகை பூக்கும்
முகம்களும்தான்

அடிவானம் வரை
பூசிக்கிடப்பது மேகத்தின்
சாயம் மட்டுமில்லை
அடிமனம் வரை பரவிக்கிடக்கும்
அன்பின் வாசனைகளும் தான்

காதினைக் கவர்வதென்னவோ
அதிசயமிக்க பெருஞ்சொற்கள்
மட்டுமில்லை
ஆதரவாய்பேசிடும்
சிறுசொற்களும்தான்

ஆனாலும்
யாருக்கும் நேரமில்லை
நேசத்தை பகிர்வதற்கும்
நேசத்தை பெறுவதற்கும்

எல்லா அழைப்புகளும்
எல்லா சந்திப்புகளும்
எல்லா உரையாடல்களும்
அன்பினைத்தவிர
மிக மிக முக்கியமானது.

மயிலிறகு மனசு

▪ சிபானா அஸீம்



அம்மாவுக்கு தினமும் கொடுக்க வேண்டிய
மாத்திரை தீர்ந்து போயிருந்தது,
தேநீர் குடிப்பதை நிறுத்திவிட்டேன்,
மளிகைக் கடை பாக்கியை இடைவிடாது
கேட்டுக்கொண்டிருக்கிறான்...
கடைக்காரன்
புகை பிடிப்பதை நிறுத்தி
செலவை கொஞ்சம் குறைத்தேன்,
பள்ளிக்கூட கட்டணம் செலுத்த வேண்டுமென
தினமும் ஓயாத மகனின் அழுகை,
இரவு பத்து மணி வரை ஓவர் டைம் வேலை
பார்க்கத் தொடங்கிவிட்டேன்,
வீட்டு வாடகை இம்மாதத்திலிருந்து ஐநூறு ருபாய்
அதிகம் தரவேண்டும்
இல்லையெனில் வீட்டை காலி செய்யுங்களென்ற
வீட்டுக்காரருக்காய்
வேலைக்காக பேருந்தில் போன செலவை மிச்சம்
செய்து மிதிவண்டியில் பயணிக்கிறேன்,
கையில் காசு இருந்தாலும்
இல்லையென்றாலும்,
உண்பதற்கு ஏதாவது வாங்கி தருவேனென
நம்பிக்கையோடு காலைச் சுற்றும் நாய்க்குட்டிக்கு
என்ன சொல்வது!

▪ மு.முபாரக்



ஆறறிவுடையோர்
பெருக்க
நெருக்கத்தினால்
உண்டான
புழுக்கத்தை
பொறுக்க முடியாமல்
முடிந்தளவு
தனக்குத் தானே
விசிறிக் கொள்கிறது
மரம்!

▪ **கலை**

நானும் வருவேனென
அடம் பிடிக்கும்
தூங்கும்
குழந்தைக்கு தெரியாமல்
வாகனம் எடுத்து வெளியே செல்லும் அப்பா போல
சத்தமில்லாமல்
வந்து போயிருந்தது
அதிகாலை
மழை

▪ **பூங்கோதை கனகராஜன்**

# சலனம்



திட்டிக்கொண்டே
குண்டும் குழியுமான
சாலையை கடப்பது
பழகிப்போனதுதான்
என்றாலும்...

அந்தக்குழிகளில்
தேங்கி நிற்கும்
குட்டி குட்டி
தேசங்களை...

ஒரு தேசத்திற்கும்
இன்னொரு தேசத்திற்கும்
இடையே கால்வாய்
வெட்டுவதை...

அதில்
நீச்சல் குளமாக
மாற்றி மழைப்பூச்சி
விளையாடுவதை...

அதில்
மூழ்கிக் கிடக்கும்
வானத்தை...
ரசித்த நாட்களுமுண்டு
சலனமின்றி
கடந்த நாட்களுமுண்டு

அதில்
தாகம் தீர்த்துக்கொள்ளும்
நாய்க்கும் யாதொரு
சலனமுமில்லை....

அந்த நீர்த்தேக்கத்தில்
சிறுநீர்கழிப்பவரை
பற்றியும் நாய்க்கு
யாதொரு
சலனமுமில்லை...

மேலும்
எந்த தண்ணீர் தொட்டியிலும்
நாய்
சிறுநீர்
கழிப்பதுமில்லை....

மேலும்
குண்டும்
குழியுமான
வாழ்க்கைக்கு
பழகி விடுகிறது
நாய்க்கும் எனக்கும்
யாதொரு சலனமுமில்லை....

▪ தோழன் பிரபா



சுழலும்விழிகளே
சாட்டையானது
பம்பரமாகிறேன்

லீலாவினாதங்களை நிகழ்த்துபார்வை
அலைகழிக்கிறது

கம்பீரம்இழக்காத கனிவின்அழகினால்
தன்னிலைமறந்து தவிக்கிறேன்

உதிரும் சருகே யவ்வனம்என்றறிந்தும்
நதிவழி பரிசலாய்
மிதக்கிறேன்

காந்தத்துண்டென இருமுனையீர்ப்பின்றி
மொத்தமாய்
ஈர்க்கிறாய்

பொதுபுத்தியின்
கசடுகிடங்குகள்
தேவைக்கும்
அன்பிற்கும்
இடைவெளியில்
இருப்பை உருவாக்குவதை
இல்லறம்என்கிறார்கள்

நல்லறமா அது?

■ சிங்கார சுகுமாறன்



உன் கைகள் நடுங்கும் போது
நீ தேடும் மது கோப்பையாய் என்னால் இருக்க முடியாது...

ஒரு காபி சூடு குறைந்ததற்காய்
என்னை கசியவிட்டவன் தானே நீ...

காய்ச்சலின் குமுறல்கள்
உன் காதடைந்த போதும் செவிடாகிப் போனவன் தானே நீ...

புன்னகைக்கும் நம் குழந்தையின் கன்னக்குழியில்
இன்னொருவனின் சாயல் தேடியவன் தானே நீ...

பூச்சூடிய குற்றத்திற்காக
என்னை கசக்கி எறிந்தவன்
தானே நீ...

ஆளில்லா வீட்டில் எறியப்பட்ட ஒரு நாளேடாய்
கிடக்கும் நிலையில் தான் உனக்கு திருந்த முடிகிறதா?

அணையா விளக்கு தான் நிழல் தரும்
அணைந்த பிறகு நிழல் எதற்கு?

நீ மாடாய் அடித்து துவைத்த என் தோல்
ஒரு பறையாய்
உனக்கு சுடுகாட்டில் இசை முழங்கும்...

உன் கடந்த காலத்தை நினைத்துக் கொண்டு என் நிகழ்காலத்தில் நுழையாதே....

தீபத்திரியாய் எரிந்து முடிந்த பின்னும்
என் தணல் இன்னும் மிச்சமிருக்கிறது!!

▫ மலர்விழி



பெருநகர சாலைப் புழுதிகளின்
பரிசத்தில் பிரகாசிக்கும்  மதில் சுவர்கள் எங்கும்
பைபிள் வசனங்கள்..

நடைபாதை கடையொன்றில் ஏற்பட்ட
கைகலப்பில் வந்த வாய் வசைகளை ஊடுருவி
பாய்கிறது  பாங்கொலி

மஞ்சள் பூத்த சுவரருகே
மங்களமாய் வீற்றிருக்கும் மாகாளியம்மன்

பச்சை நிற தொட்டியெங்கும்
மட்கிப் போக நினைக்கும்
மட்கா குப்பைகள்..

நிறுத்தத்தில் நில்லாமல்
சற்றேறக்குறைய சரியாக நிற்கும்
அரசுப் பேருந்து கேட்கிறது சரியான சில்லறை

தொடர்வண்டி நிலையமெங்கும்
அலைந்து திரியும் பதின்மவயது சிறுவன் கூவி கூவி
விற்கிறான்
வேற்றுமொழி நாளிதழை

வரக்கூடிய மழைகாலத்தை அறிந்து
துரித நடவடிக்கை எடுக்கிறது அரசு
சேரிகளில் வீடுகள் இடிப்பு

ஏரியில் கட்டப்பட்ட அடுக்குமாடிக்
குடியிருப்புக்கு படகு வசதி

காட்சிகள் மாறவில்லை
மேம்பால சுவர்களில் கட்சி தலைவர்களின்
பெயர்கள் மாறிவருகிறது..

▪ **தமிழினியன் சேயோன்**



யாராவது ஒருவரின்
கையில் தெரிந்தே
பகடைக்காயாய் இருக்கிறோம்...

அவர்கள் விரும்புவதுபோல்
விழாத போது வெட்டியும்
வீசப்படுகிறோம்...

“ஒரு தாயம்“ என்று
கையேந்தி மறுபடியும்
யாராவது வேண்டுகையில்
மீண்டும் ஆடத் தயராகிறோம்
அன்பெனும் சூதாட்டத்தை
விடத்தெரியாத அடிமைகளாய்...

வாழ்வெனும் பெரும் மாயையில்
எவரோ ஒருவரின் நேரக்கடத்தி
விளையாட்டு தானே நாமெல்லோரும்..

■ அலர்மேல்மங்கை

நீ காலி செய்து விட்டு
சென்ற அறையில்

இன்னும் உன் வாசனை
மிச்சமிருக்கிறது

அதை முகர்ந்து கொண்டே
உன் நினைவுகளை
அசை போட்டுக்கொண்டிருக்கிறேன்...

■ காட்டுவா ராபி.மு



என் பிரபஞ்ச நிசப்தத்தை
கூவிக் கிழிக்கும்
சேவற்கனவு நீ !

என் வான வதனத்தில்
வந்தமரத் துடிக்கும்
கருப்பட்டிக்குருவி நீ !

என் நிலாச் சன்னலில்
பூத்திடத் நினைக்கும்
கனாத்தொட்டி நீ !

என் சூரிய அருவியில்
பூத்துக் குலுங்கும்
அமிர்தநிழல் நீ !

என் வானவில்லாய்
வாழ்ந்திடத் துடிக்கும்
தேநீர்மழை நீ !

என் மனத்தமனியாற்றின்
கரையோரம் படறும்
முத்தச் செடி நீ !

யாதும் நீயாகிறாய்
யாதாகிறேன் நான் !

▪ **வினோதன்**



ஒருவரின் நினைவுகளில் வாழ்வதென்பது
அவ்வளவு எளிதானதாக இருப்பதில்லை மிக
கொடுமையான ஒன்று...

அரவணைத்து ஆறுதல் தந்து
அன்பை ஊற்றி காதல் செய்து
கனவுகள் கண்டு இரவு பகல் பாராமல் கதைபேசிய
அவர்களுடன் உறவாடிய வார்த்தைகள் எல்லாம்
ரணமாய் தாக்குகின்றது நடுநிசி இரவில் ...

உறங்கும் போது நினைவுகளில் உன் மகம் கண்டு
என்னை ஏன் விட்டு சென்றாய் என்று உன்னை
திட்டி கதறியழும் போது
ஏன் இந்த வாழ்க்கை என்று விடிகிறது பொழுது ...

உன்னை அணுவனுவாய் ரசித்து உருகி என்னையே
மெய் மறந்து உனை காதலித்ததால் தானோ
என்னவோ
எல்லாவற்றையும் கண்களில் தேக்கி
வைத்திருக்கிறேன் கண்ணீர் குடமாய் ..
அதையும் சில சமயம் உடைத்து செல்கிறாய்
அவ்வப்போது எதிரிலும் ஞாபகங்களில் தோன்றி.....!!!

இனி என்ன இருக்கிறது உனக்கும் எனக்குமான
பந்தம் எல்லாம் முடிந்த பின் வேண்டாம் என்று
விலகிய பின் உன்
நினைவுகள் மட்டும் எதற்கு சொந்தம்
கொண்டாடுகிறது...!!

■ ச.இராஜ்குமார்



எனது நீண்ட நெடிய நெடுஞ்சாலைப் பயணத்தில்
என்னை கடந்து சென்ற
ஒரு குட்டி யானை வண்டியில் கண்ணீர் உகுக்க,
ஒரு காளைக் கன்று நலிந்து மெலிந்து சென்று
கொண்டிருந்தது!

எட்டிப்பார்த்தேன்,
காற்றில் மிதந்த அதன் கண்ணீர் என் முகத்தில்
பட்டது!
துடைத்த கரங்களை விரித்து பார்த்தேன்!

அதில் ஒரு வாசகம் தென்பட்டது!

சாமைக் கஞ்சிக்கு கூட வழி அற்றவள் வயிற்றில்
உதித்த பொண்ணும்!
சீமைப் பசுவின் கருவில் தரித்த காளைக் கண்ணும்!

சபிக்கப்பட்ட பிறவிகள்

**மா.தனபால்**

உனக்கும் எனக்கும்
பிடித்த பாடல் ஒன்று இருக்கிறது
பகலில் எப்போதாவது கேட்டால்
இருளின் பிம்பங்களாய் அமர்ந்து கொள்கிறது
இரவில் கேட்டால் உயிர் நெளியும் துன்பங்களாகிறது
பிம்பமும் துன்பமும் தரும் பாடலுக்குள்
எத்தனை வரிகள் எத்தனை வலிகள்
திருமணமான பிறகு.

**அ.உமர் பாருக்**

படைப்பு
சமூகத்தின் இணைப்பு



# சுதந்திரக் கூத்து

புது சரித்திரம்

விரைவில்..